அமைச்சர் இரா. இராஜேந்திரன் – சென்னை வர்த்தக மையத்தில் துவக்கி வைத்த

# தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் ‘ பயணச் சந்தை’

## மூன்று நாட்களில் – 5000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 25-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி முதன்முறையாக சுற்றுலாத்துறையால் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட தமிழ்நாடு பயணச்சந்தையை சுற்றுலாத்துறை அமைச்சர். இரா. இராஜேந்திரன் கடந்த 21.03.2025 அன்று துவக்கி வைத்தார்.



இந்த பயணச்சந்தையானது மார்ச் 21 முதல் 23 வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இப்பயணச்சந்தையின் இரண்டாம் நாளான மார்ச் 22-ஆம் தேதி பிற்பகல் முதல் பொது மக்கள் பார்வையிட அனுமதியும் வழங்கப்பட்டது. மாநிலத்தின் வளமான மற்றும் மாறுபட்ட சுற்றுலா வாய்ப்புகளை வெளிப்படுத்தவும், தொழில்துறை ஒத்துழைப்பை வளர்க்கவும், சுற்றுலாத் துறையில் முதலீடுகளை ஈர்க்கவும் இந்த நிகழ்வு ஒரு முதன்மை தளமாக செயல்படும்.

தமிழ்நாடு பயணச்சந்தை நிகழ்விடத்தில், *Travel and Tourism Fair* அமைப்பின் மூலம் பயணச்சந்தை நடத்தப்பட்டது ஒரு கூடுதல் சிறப்பாகும். இதில் தெலுங்கானா, உத்தரகண்ட், தமிழ்நாடு சுற்றுலாத்துறை, நேப்பால் டூரிஸம், ஆந்திரப்பிரேதேசம் டூரிஸம், டெல்லி டூரிஸம், இந்தியா டூரிஸம், ஜார்கண்ட் டூரிஸம், கேரளா டூரிஸம், பஞ்ஜாப் டூரிஸம், உள்ளிட்ட மாநில அரசு சுற்றுலாத்துறை அரங்குகளும் அமைக்கப்பட்டு பயணச் சந்தைக்கு வருகை புரியவர்களுக்கு சிறந்த அனுபவமாக விளங்கியது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, மாநிலத்தின் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதை உறுதி செய்து, நிலையான மற்றும் பொறுப்பான சுற்றுலாவை மேம்படுத்த தமிழ்நாடு அரசு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அவ்வகையில் தமிழ்நாடு பயணச்சந்தையும் ஒரு சிறந்த முன்னெடுப்பாகும். இப்பயணச்சந்தையில் தமிழ்நாடு முழுவதும் பல் வேறு மாவட்டங்களிலிருந்து சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள் பயண முகவர்கள் மற்றும் தங்கும் விடுதிகள் சார்ந்த தொழில் முனைவோர் ஆகியோர் கலந்துகொண்டு, சுமார் 115 அரங்குகள் அமைத்துள்ளனர். மேலும் இப்பயணச் சந்தைக்கு சிங்கப்பூர், மலேசியா, அயர்லாந்து, ஸ்பெயின், நெதர்லாந்து, துருக்கி, ஆகிய அயல்நாடுகள் மற்றும் 32 உள்நாட்டு முகவர்கள் மற்றும் முதலிட்டாளர்கள் பங்குபெற்று தமிழ்நாட்டு முகவர்களுடன் தொழில் சார்ந்த கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

தமிழ்நாடு சுற்றுலாப் பயணச்சந்தை 2025, பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், விருந்தோம்பல் வல்லுநர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குதாரர்களை ஒன்றிணைத்து, மாநிலத்தின் விரிவான சுற்றுலா வாய்ப்புகளை கண்டறியும். பாரம்பரிய சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, ஆரோக்கிய சுற்றுலா மற்றும் ஊக்கத்தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (MICE) போன்ற முக்கிய பிரிவுகளில் வளர்ந்து வரும் போக்குகள், பிராந்திய மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்த விவாதங்களுக்கு இந்த நிகழ்வு வழிவகுத்துள்ளது.

உத்திசார் முன்முயற்சிகள் மற்றும் வலுவான கொள்கை ஆதரவின் காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. தமிழ்நாடு பயணச் சந்தை 2025, புதிய வணிக வாய்ப்புகளை வெளிப்படுத்துவதுடன், தொழில் கூட்டாண்மையை வலுப்படுத்து வதுடன், மாநிலத்தின் பார்வையை உலகளாவிய சுற்றுலா மையமாக மாற்றியுள்ளது .

இந்த பயணச்சந்தையில் சர்வதேச அளவில் பயண ஏற்பாட்டாளர்கள் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி முகவர்கள் மற்றும் மாநில அளவிலான பயண ஏற்பாட்டாளர்கள் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி முகவர்கள் மற்றும் பொது மக்கள் என 5000க்கும் மேற்பட்ட நபர்கள் கடந்த மூன்று நாட்களில் தமிழ்நாடு பயணச்சந்தைக்கு வருகை புரிந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

# திருப்பூரில் சட்டக் கல்லூரி - நிதி நிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

சென்னை,மார்ச்.25-

திருப்பூரில் சட்டக் கல்லூரி அமைப்பது குறித்து நிதிநிலைமைக் கேற்ப அரசு பரிசீலிக்கும் என, சட்டப் பேரவையில் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவித்தார்.

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:



**க. செல்வராஜ்:** (அ) திருப்பூரில் சட்டக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர்:எஸ். ரகுபதி:** திருப்பூரிலே புதிதாக அரசு சட்டக் கல்லூரி அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொன்னாலும் நிதிநிலைக்கேற்ப முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அதற்குப் பிறகு முடிவெடுக்கப்படும்.

**க. செல்வராஜ்:** திருப்பூரில் புதிதாக சட்டக் கல்லூரி அமைக்க அரசின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்த அமைச்சர் அவர்களுக்கு திருப்பூர் தெற்குத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், திருப்பூர் மாவட்டம் என்பது தொழிலியல் நகரம் என்பதை நாடறியும். இலட்சக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் நிறைந்த எங்கள் திருப்பூர் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி படிப்புகள் பயிலும், விரும்பும் குழந்தைகள் செல்வங்கள் கோவை, திருச்சி, மதுரை, சென்னை என வெளியூருக்குச் சென்று தங்கிப் பயில வேண்டிய நிலை உள்ளது. ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினுடைய குழந்தைகளின் சட்டப் படிப்பு கானும் கனவு நனவாக இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கும் வகையில் நாடு போற்றும் நல்லாட்சி நடத்தி வரும் தாய் உள்ளம் கொண்ட தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மேலும் ஒரு மகுடம் சேர்க்கும் வகையிலே அமையும் என்பதைச் சொல்லி இந்த ஆண்டே அந்த சட்டக் கல்லூரியைத் துவக்கிக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**அமைச்சர் எஸ். ரகுபதி:** உறுப்பினர் அவர்களும் அதைபோன்று நம்முடைய செய்தித் துறை அமைச்சர் அவர்களும் தொடர்ந்து திருப்பூரிலே சட்டக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும் அரசினுடைய நிதி நிலைமைக்கேற்பதான் நாம் சட்டக் கல்லூரியைத் துவங்க முடியும்.

எனவே, முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அரசின் நிதிநிலைமை ஒத்துவருமேயானால் அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

உதகையில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏப்.6- அன்று திறந்து வைக்கிறார்!

## இறுதிக் கட்டப் பணிகளை ஆய்வு செய்தபின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

நீலகிரி,மார்ச்.25-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் , நீலகிரி மாவட்டத்தில் 700 படுக்கை வசதிகளை கொண்ட உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினை 06.04.2025 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைப்பதை முன்னிட்டு, இறுதி கட்டப்பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (23.03.2025) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், புதிதாக கட்டப்பட்டுள்ள உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினையும், மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அவசர சிகிச்சை பிரிவு, பழங்குடியினர்களுக்கான உள்நோயாளிகள் பிரிவு (ஆண்கள் மற்றும் பெண்கள்), எம்.ஆர்.ஐ பிரிவு, சிடி ஸ்கேன் பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ; செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி, தமிழ்நாட்டில் பல்வேறு மருத்துவ கட்;டமைப்புகள் மேம்படுத்தப்பட்டும், ஏற்படுத்தப்பட்டும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நீலகிரி மாவட்டத்தில் எமரால்டு மருத்துவமனையில் ரூ.16.44 கோடி செலவில் கட்டப்பட்ட 50 படுக்கைகள் கொண்ட வார்டு மற்றும் அறுவை சிகிச்சை அரங்கும், குன்னூர் அரசு மருத்துவமனையில் ரூ.2.66 கோடி செலவில் கட்டப்பட்ட தடுப்புச்சுவர், வலி மற்றும் பராமரிப்பு மையமும், கோத்தகிரி அரசு மருத்துவமனையில் ரூ.3.30 கோடி செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடமும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், கட்டபெட்டு, மசினகுடி, அம்பலமூலா, கிண்ணக்கொரை, கூக்கல், தும்மனட்டி ஆகிய 6 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆயுஷ் நலவாழ்வு மையங்களும், முள்ளிமலை, மசக்கல், நெடிக்கோடு, சேலாஸ் ஆகிய நான்கு இடங்களில் புதிதாக ரூ.1.10 கோடி செலவில் துணை சுகாதார நிலையங்களும், ரூ.1.25 கோடி செலவில் தெப்பக்காடு மற்றும் இத்தலார் ஆகிய இரண்டு இடங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் கட்டடம் மற்றும் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டடமும், ஆர்.கே.புரம் பகுதியில் நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டடமும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பாரத பிரதமர் , தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கடந்த 2022 ஜனவரி மாதம் மருத்துவக்கல்லூரியினை திறந்து வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக ரூ.143.69 கோடி செலவில் மருத்துவமனை கட்டுமான பணிகள் துவங்கப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித்துறையினரும் இணைந்து நிலச்சரிவு, மழை உள்ளிட்ட பல்வேறு இடர்பாடுகளுக்கிடையே இக்கட்டுமான பணிகளை சிறப்பாக கட்டி முடித்துள்ளனர். மேலும், துறை அமைச்சர் என்கிற முறையில் 4, 5 முறை நான் நேரடியாக இப்பணிகளை கள ஆய்வு மேற்கொண்டேன். நீலகிரி மாவட்டத்தை பொறுத்தவரை மருத்துவத்துறை கட்டமைப்பு நிறைவுபெற்ற மாவட்டமாக உள்ளது. இந்தியாவிலேயே 700 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைந்துள்ள மலை பிரதேசம் என்றால் அது நமது ஊட்டி என்றுதான் சொல்ல வேண்டும்.

மேலும், இம்மருத்துவமனையில் சிறப்பம்சம் என்னவென்றால் பழங்குடியினர்களுக்கு தனி வார்டு ஒன்று அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்ததை தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பழங்குடியினர்களுக்கென தனி வார்டு ஒன்று, ஆண்களுக்கு 20 படுக்கைகள், பெண்களுக்கு 20 படுக்கைகள் மற்றும் மகப்பேறுக்கென்று 10 படுக்கைகள் என மொத்தம் 50 படுக்கைகள் கொண்ட வார்டு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மருத்துவமனையை பொறுத்தவரை எம்.ஆர்.ஐ. சிடி ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே போன்ற அதிநவீன தொழில்நுட்பத்துடனும், 10 அறுவை சிகிச்சை அரங்கங்களுடனும் அமைக்கப்பட்டு, தற்போது திறக்கும் தருவாயில் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் , நீலகிரி மாவட்டத்திற்கு எதிர்வரும் ஏப்ரல் 05.04.2025 மற்றும் 06.04.2025 ஆகிய இரண்டு நாட்கள் வருகைப்புரிந்து, 06.04.2025 அன்று உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கவுள்ளார்கள். அதுமட்டுமல்லால் 17 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களையும், எமரால்டு அரசு மருத்துவமனையில், ரூ.8.60 செலவில் தங்கும் அறை, ஆம்புலன்ஸ் நிறுத்துமிடம், தடுப்புச்சுவர், கழிவுநீர் சுத்திகரிப்பான் போன்ற பல்வேறு வசதிகள் கொண்ட கூடுதல் கட்டடத்தினையும் திறந்து வைக்கவுள்ளார்கள். மேலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் கூடுதலாக பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார்கள் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ; தெரிவித்தார்.

முன்னதாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் , அரசு தலைமை கொறடா முன்னிலையில், பழங்குடியின மக்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வுகளின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா இ.கா.ப., , பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறை இயக்குநர் டி.எஸ்.செல்வவிநாயகம், பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (கோவை மண்டலம்) ரங்கநாதன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், பொதுப் பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் ரமேஷ், இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.ராஜசேகர், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.சோமசுந்தரம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி செயற்பொறியாளர் திருமதி.சங்கீதா, உதகை நகராட்சி ஆணையாளர் ஸ்டேன்லிபாபு, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பீட்டர் ஞானராஜ், நகராட்சித்தலைவர்கள் திருமதி.வாணீஸ்வரி (உதகை), திருமதி.பரிமளா (கூடலூர்), உதகை நகராட்சித் துணைத்தலைவர் ரவிக்குமார், நகராட்சிப் பொறியாளர் சேகரன், இருப்பிட மருத்துவ அலுவலர் மரு. ரவிசங்கர், உதகை நகரமன்ற உறுப்பினர் ஜார்ஜ், உதகை வட்டாட்சியர் சங்கர்கணேஷ் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர், மேம்படுத்தப்பட்ட வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (23.03.2025) திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பாலுசாமி மற்றும் மருத்துவர்கள் உடனிருந்தனர்

கே.எஸ்.சந்திரன் தலைமை! எம்.எஸ்.ஏ. முகம்மது ரிஷா வரவேற்புரை!

# அன்னவாசல் தெற்கு ஒன்றிய - பேரூரில் முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## கே.கே.செல்லப்பாண்டியன்- – சிவாஜி கிருஷ்ணமூர்த்தி- –த.சந்திரசேகரன் – சொ.தமிழினியன் சிறப்புரை!

புதுக்கோட்டை. மார்ச் 25-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. அன்னவாசல் தெற்கு ஒன்றிய திமுக அன்னவாசல் பேரூர் திமுக சார்பில் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் 22.03.2025 சனிக்கிழமை கலைஞர் திடல், அன்னவாசலில், அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் தலைமையிலும், அன்னவாசல் பேரூர் செயலாளர் எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா வரவேற்புரையிலும் நடைபெற்றது.

தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், தலைமை கழக பேச்சாளர் சொ. தமிழினியன், ஆகியோர் சிறப்புரையாற்றி னார்கள்.

மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, இராப்பூசல் எம்.செந்தில்குமார், சி.அரங்கநாயகம், ஆர். உஷாராணி, அ.பிரபா, ஏ.சுந்தர்ராஜ், டாக்டர் அமானுல்லா, எம்.வி.முத்தையா, எஸ்.நிஜாமுதீன், பேக்கரி சி.மணி, ஆர். ஜே.அண்ணாத்துரை, கே.சிவசுப்பிரமணியன், ஆர்.ரவி, கே.டி.ஆர்.தங்கராஜ், எஸ்.ராஜேந்திரன், இரா.முத்துச் செல்வம சித. சண்முகம், எம்.கோவிந்தராஜ், ஆர்.கோபாலன், எஸ்.முருகையன், எம்.முத்துச்சாமி, பழ.பாண்டியன், முத்துலெட்சுமி ராஜேந்திரன், பி.கார்த்திக், திருப்பதி, ஏ.ஆர்.ராஜேந்திரன், டிட்டோ சந்தானம், எஸ். ராஜ்குமார், எம்.சாந்தி முருகேசன், டி. கணேசன், கே.கார்த்தி, எம்.கருப்பையா, எம்.சலீம் இஸ்மாயில், எஸ்.முத்துக்குமார், வி.செல்லமணி ஏ. அறிவழகன், எஸ்.முகம்மது இலியாஸ், ரா.கவியரசன், எம். பாஸ்கர், சி.செந்தில், சி.கிட்டு, கே.அல்காப் உசேன், டி. தமிழரசன், எழில்ராஜா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் அன்னவாசல் பேரூர் கழக துணைச் செயலாளர் பி.மதியழகன் நன்றி கூறினார்.

என்.கௌதமன் தலைமை! பி.என்.கார்த்தி வரவேற்புரை! கழக இளைஞர் அணி சார்பில்

# நாகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

## ஊடகவியலாளர் தி.செந்தில்வேல் – சு.சுகநிலவன் சிறப்புரை!

நாகை, மார்ச்.25

நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நாகை சட்ட மன்ற தொகுதி நாகை கோட்டைவாசல் பெரியார் திடலில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்திக் வரவேற்றார்.

நாகை சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர். செந்தில்குமார், ஒன்றியக் கழக் கழகச் செயலாளர்கள் ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகமமுசுல்தான், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே.சுரேஷ், டி.எஸ். அசோக், ஜி.தாமோதரன், எஸ்.டேனியல்சத்தியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் ஊடகவியலாளர் தி.செந்தில்வேல், கழக இளம் பேச்சாளர் சு. சுகநிலவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன், பொருளாளர் மு.லோக நாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், தலைமைக் கழக வழக்கறிஞர் எம்.தினேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர்செல்வம், கே.பாண்டியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், ப.உதயக்குமார், பி.முருகானந்தம், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, எஸ்.பால்ராஜ், ஆர்.ஆர்.குலோத்துங்கன், இளம்.சுந்தர், அ.பாரிபாலன், தமயந்தி, க.வெற்றிச்செல்வன், வி.கமல், ஆர். சுரேந்தர், எஸ்.சந்தோஷ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நாகரெத்தினம், நாகை நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்தியன்,

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் திருமருகல் வடக்கு அசோகன், திருமருகல் தெற்கு ஏ.எஸ்.அருண், நாகை வடக்கு வினோத், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் , நாகை நகரம்,, நாகூர் நகரம் நிர்வாகிகள், நாகை வடக்கு ஒன்றியம், திருமருகல் தெற்கு ஒன்றியம், திருமருகல் வடக்கு ஒன்றியம் நிர்வாகிகள், திட்டச்சேரி பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், கிளை, வார்டுக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தி.கலையரசன் நன்றி கூறினார்.




புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் தெற்கு ஒன்றியம், அன்னவாசல் பேரூர் தி.மு.க. சார்பில் அன்னவாசலில் ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் தலைமையிலும், பேரூர் செயலாளர் எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா வரவேற்புரையிலும் நடைபெற்ற கழகத் தலைவர் 72 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்வில் த.சந்திரசேகரன், அரு. வீரமணி, இராப்பூசல் எம்.செந்தில்குமார், சொ.தமிழினியன், சி.அரங்கநாயகம், ஆர்.உஷாராணி, அ.பிரபா, ஏ.சுந்தர்ராஜ், டாக்டர் அமானுல்லா, பி.மதியழகன், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.